செய்தி வெளியீடு எண்: 434 நாள்: 08.09.2016

# தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், (www.editn.in) தமிழக அரசின் தன்னாட்சி சங்கமாக சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் 2013-14-ஆம் ஆண்டில் முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய தொழில் முனைவோரால் தொடங்கப்படும் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தை (NEEDS) அறிவித்தார். இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 2606 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோருக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. அவர் தொழிலை விருத்தி செய்ய அதே தொழிலை செய்பவர்களிடமும், மற்றும் அத்தொழிலுக்கு தேவைப்படும் பொருட்களை தயாரிக்கும் வேறு தொழில் புரிபவர்களிடமும், தயாரித்த பொருட்களை விற்பனை செய்பவர்களிடமும், தயாரித்த பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர்களிடமும், வங்கிகள் மற்றும் அத்தொழிலுக்கு தேவையான தொழில் நுட்பம் வழங்குவோரிடமும் ஒரு இணைப்பு (Networking) தேவைப்படுகிறது. இந்த இணைப்பை எப்படி பெறுவது என்பதை கற்பிப்பதே இந்த கூட்டத்தின் நோக்கமாகும்.

புதியதாக தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு வழிகாட்டவும், ஆலோசனைகள் வழங்கும் பொருட்டும் EDI ஒவ்வொரு மாதமும், இரண்டாவது வெள்ளி கிழமைகளில் The Indus Entrepreneurs (TiE) என்ற நிறுவனத்துடன் இணைந்து ஆலோசனை கூட்டம் நடத்துகிறது. முதலாவது ஆலோசனை கூட்டம் 13.05.2016 அன்று நடைபெற்றதில் 20 தொழில் முனைவோர்களும், இரண்டாவது ஆலோசனை கூட்டம் 10.06.2016 அன்று நடைபெற்றதில் 36 தொழில் முனைவோர்களும் மூன்றாவது ஆலோசனை கூட்டம் 08.07.2016 அன்று நடை பெற்றதில் 28 தொழில் முனைவோர்களும், 12.08.2016 அன்று கோவை PSG–யில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் 52 நபர்களும் பயன் அடைந்துள்ளனர்.

அடுத்த ஆலோசனை கூட்டம் வரும் செப்படம்பர் மாதம் 9–ந்தேதி, சென்னை 600 032, கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில், ஈக்காடுதாங்கல் பார்த்தசாரதி தெருவில் அமைந்துள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் தாங்கள் வருகைதந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள, திரு இ. பாஸ்கரன், துணை இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களை மின்னஞ்சல்: ddp@editn.in மூலமாகவும், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் தொலைபேசி எண்கள் 22252081, 22252082 மற்றும் திரு டேவிட், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் The Indus Entrepreneurs (TiE) அவர்களை 9042912812 எண்ணிலும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த மாதக்கூட்டத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வரைமுறைகள் குறித்து வல்லுனர் ஆலோசனை வழங்குவார். இந்த கூட்டத்தின் நிகழ்வுகளை தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் வலைதளமான (www.editn.in) மூலம் காணலாம். தேனீர் இடைவேளையில் தொழில் முனைவோர்கள் கலந்தாலோசிக்கையில் அவர்களுக்குள் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள இந்த கூட்டம் உதவும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**